
உ

தண்டபாணி துணை

YER
IY MAD



# தண்டபாணிப் பதிகம்

வெளியிடுபவர் :

**காளத்தி - நடேச முதலியார்**

உரிமையாளர்: லாயல் அச்சகம், சென்னை-5

ஆசிரியர்: "இறைவனின் உறைவிடங்கள்"

# தண்டபாணிக் கடவுள் பதிகம்

சீதமது மிகமருவு கமலமல ரொப்பச்
சிறந்தநின் திருவடிகளும்
செய்யவரை தன்னில்மிகு துய்யஒளி யெய்திஎழில்
செய்யுமொரு கௌபீனமும்
ஓதரும் அறிவுரைசெய் வலக்கரத் துப்பூமி
ஊன்றிநிற் குந்தண்டமும்
உள்ளமகிழ் கொள்ளஓர் பிள்ளையென வேமருங்
கோடங் கிலங்கு கையும்
போதமொரு நொடிதந்து சனனவினை நீக்கிடுவி
பூதியபி ஷேகமுகமும்
பூண்டதாழ் வடருத்தி ராட்சமும் கண்டுநான்
போற்றநீ என்று வருவாய் ?
தாதளவில் வரியளிகள் மதுவுண்டு பண்பாடு
தண்டலைப் பழனி மலையில்
தமிழ்முனிவன் அருணகிரி பணியஅருள் புரியமொரு
தண்டபா ணித்தெய்வமே. (1)

TIRUV
அரிக்கண மொலிக்குந் திருப்பரங் குன்றமும்
அலைகொழித் திடுசெந்திலும்
அன்பர்கள் துதிக்குமுன் ஆவினன் குடியுமுயர்
அந்தணர்சொல் ஏரகமெனும்
விரிக்குமறை யின்பொருளை அன்றுமதி முடியோன்
விளங்கவுரை செய்தமலையும்
வேடர்கள் தினங்கூடி மதுவுண்டு வெறியாடு
வெகுகுன்று தோருடலும்
முரிக்காடி வெருவரு மென் அருவி பெருகுபழ
முதிர்சோலை மலையுமேவி
முன்கண்டு கொண்டா றெழுத்தமுத முண்டுண்டு
முறைமைபெற அருளிமிகவும்
தரிக்கமுடி யாதவினை யகலமிகு தயவுபுரி
தவமுலவு பழனிமலையில்
சமயகுர வசரவண பவமுருக புலவருக
தண்டபா ணித்தெய்வமே. (2)

அரையாடை யின்றிநிரு வாணியாய்க் கரமதனில்
அன்றொரு கபாலமேந்தி
அதிதிநான் பிச்சையிடும் என்றுதிரி வோன்மைந்த
னுமெனவும் நாட்டுதற்கோ
நரைமேவி யுடல்மெலிந் தேயாவி போகவரும்
நாளேனும் உறுதிகொண்டு
நற்றவம் புரிவோர்கள் சித்துவிளை யாடநா
னுவிதங் காட்டுதற்கோ
விரைசேரு மணமாலை கொண்டுனது மெய்யன்பர்
விண்கங்கை யாட்டுதற்கோ
வினையனேன் கருமங்கள் யாவையும் ஒருங்கே
விரட்டியின் றோட்டுதற்கோ
தரைமீது பொற்பதம் படவருதல் ஏதுபுகல்
தலைமைபெறு பழனிமலையில்
தஞ்சமென வந்தவர்கள் கொண்டநினை வின்படிசெய்
தண்டபா ணித்தெய்வமே. (3)

ஆற்றுப் படுத்தநக் கீரனை மதிக்கிலேன்
அலங்காரம் அநுபூதியால்
அப்பனென முப்புவியர் ஒப்பவரும் அருணகிரி
யைச்சொப் பனத்தும் எண்ணேன்
தோற்றைந்து வயதுவரை ஊமையா யுனதருள்
சுரந்துகலி வெண்பாமுதல்
சொல்லரும் பிரபந்த மெல்லாந் தரும்சாமி
குமரகுரு பரனைநினை யேன்
தேற்றுமக வற்பாவி னுற்பொரு ளுரைத்திடும்
சிற்றம்ப லவநாடியைச்
சிந்தையிற் கருதிலேன் பாடுவதும் எங்ஙனம் ?
செப்பக் கவிப்பொருளருள் !
சாற்றுறும் இடும்பன்மேல் தூக்குகா வடியிலே
தாங்கிவரு பழனிமலையில்
தண்டமிழ்க் கொடைகொடுத் தண்டினோர்க் கருளுதவு
தண்டபா ணித்தெய்வமே. (4)

ஒருகனிநீ தரவில்லை யாயினும் என்றனக்

குலகினிற் கனிவகைகளாய்

உள்ளனவெ லாமஉரித் தொன்றுய்த் திரட்டியுடன்

உயர்நெய்கற் கண்டுமுதலாய்

வருமதுர மானவெல் லாம்பிசைந் தன்பர்தினம்

வந்துவந் திடைவிடாமல்

வந்தனுர்ச் சனைகளோ டபிஷேக முஞ்செயும்

வண்மையைப் பாராயெனக்

கருநீல கண்டனுக் குரைசெய்தல் போலவே

காணும்நின் செயலென்னவோ

காசினியி லொன்றில்லை யென்பவர்க் கெதிருமொழி

காட்சியொடு காட்டும்விதமோ

தருநிறையி னிற்கவிகள் கனிகள்கீ றித்திரிவ

தாலெழில்செய் பழனிமலையில்

தன்மகிமை யின்னதென நன்னயம் விளக்குமொரு

தண்டபா ணித்தெய்வமே. (5)

கலசமுனி பழமொன்று கொண்டுவந் தன்றுமுக்

கண்ணனிட மேகொடுப்பக்

கண்டுகு தப்பழம் என்னஅறி யாமலே

கஜானன ! சடானன ! என

மெலஅழைத் துலகைவல முன்னம்வந் திப்பழமு

மேகொள்மி னென்றமொழியை

மெய்யாகு மென்றுதோ கையிலேறி உலகெலாம்

விரைவினில் உலாவியருகில்

இலக முன் கரஅகர உகரமொடு மகரமுகன்

எழுந்துற் றிடுந்தந்தைதாய்

இருவரையு மேசுற்றி வந்துவந் தித்துமவ்

வின்பப் பழம்பெற்றதால்

தலமெவற் றினுமதிக மகிமையிது வெனவுமுயர்

தருமநிறை பழனிமலையில்

தந்தைகனி யீயவிலை என்றுதனி யாகவரு

தண்டபாணித் தெய்வமே. (6

ஞானப் பழத்தைப் பிழிந்துரசம் அன்பினெடும்

நாமுண்ண வுங்கொடுத்த

நல்லகுரு நாதனுனக் கென்னவிதம் இக்கனியை

நாமீவ தென்றுநாணித்

தானப் பணித்தலையர் தரவில்லை யாதலால்

சாருமொரு பிழையில்லையே

சத்திவடி வேலொடுந் தத்துமயி லேறிடும்

சண்முகா குறையுமுளதோ ?

ஏனிப் படிக்கோ வணத்தொடுந் தண்டுகொண்டு

இங்குற்றே ராண்டி யானய் ?

எமதுவினை பொடிபடவு மல்லவோ ? வந்துநீ

இப்படி யிருக்கலாமா ?

சானப்பன் அன்னையா மென்னவுனை யெண்ணினேன்

தருவையருள் பழனிமலையில்

சந்ததங் குடிகொண்ட சங்கரன் கும்பிடும்

தண்டபா ணித்தெய்வமே. (7)

பொன்மயக் கிரிபெற்ற புதல்வியோ அன்னையாம்

பொருளுக்கோர் அதிபதியெனும்

புட்பக விமானத் தனைத்தோழ னுக்கொண்ட

புங்கவனும் உன்தந்தையாம்

கன்மலைக் குடைகொண்டு மழைதடுத் தன்றுநிறை

காத்தவொரு கடல்வண்ணனே

கருதுதாய் மாமனும் பெரியதன மேந்திடும்

கமலமா துன்மாமியாம்

பன்மலர்த் தொடைசூடு மூவுலகு மாள்பவன்

பார்க்கில்ஓர் பெண்தந்தவன்

பாரிற்பெ ருஞ்செல்வம் உற்றும்நீ கோவணப்

பண்டார மாய்வருவதேன் ?

சன்மவெப் புப்பிணி யகற்றவரு சஞ்சீவி

தலையவரு பழனிமலையில்

சகலவுல கினருமடி பரவவொரு பொருளுதவு

தண்டபா ணித்தெய்வமே. (8)

தாருகன துடலைக் கிழித்துத் தகர்த்துத்

தடுத்தகிர வுஞ்ச கிரியைத்

தட்டுருவ வெட்டிப் பிளந்துக்ர மேற்கொண்டு

தரைமட்ட மாக்கிவிட்டு

யாரும்நிக ரில்லாத மாயவெஞ் சூரன்வா

ரிதியின்மறை வானவேளை

அண்டரண் டங்களும் எண்டிசை யடங்கலும்

அலறமா முதல்தடிந்து

சேருபடை யாவையுங் குத்திக் குலைத்துச்

சிவத்ததொடை யென்று சிகையில்

செம்புனல் வழிந்தோட வுந்தசை நிணஞ்சூடு

சித்ரவேல் கொண்ட குமரா

சாருகிழ மந்திபிடி யோடுநட மாடுபொழில்

தங்குமுயர் பழனிமலையில்

தரியலர்கள் மகுடமுடி பொடிபடவு மெறியுமொரு

தண்டபா ணித்தெய்வமே. (9)

நக்கீர ருக்கே யநுக்ரகித் திட்ட நாள்
கற்கிமுகி யைக்கொன்றனை !
நயமொழிசொல் அருணகிரி மனமகிழ நடனமிடு
மயிலோடும் எதிர்நின்றனை
முக்கா ரணத்தே முதற்றொழிற் கானவனை
முடியிற் புடைத்தாண்டனை
முழுதுலகு சிட்டிக்க வைத்தவனை ஒண்குடிலை
முன்பொருளை மொழியென்றனை
நெக்காக உருகுமுன தடியவர்கள் நெஞ்சமலர்
நிலயமாய்க் குடிகொண்டனை
நிற்பாடி அப்பா எனக்காது கேட்காத
தைப்போ லிருக்கின்றனை
தக்கோர்கள் புகழென்ன அநுதினமும் வளருமுயர்
தவர்மருவு பழனிமலையில்
சந்ததமும் வந்தவர்கள் பந்தநீக் கந்தருந்
தண்டபா ணித்தெய்வமே. (10)



MADRAS-41